தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் ௨௮ — திருவள்ளுவர் யாண்டு ௧௯௮௪ — மலர் ௧௧
நந்தன—மாசி
1953—பிப்பிரவரி

தமிழ் நாட்டு எல்லை.

நம் பொழில் 10-ஆவது மலரில் விளம்பரஞ் செய்திருந்தபடி, நந்தன, தை, 11உ (24—1—53) பிற்பகல் 5 மணிக்கு நம் சங்கத் தமிழ்ப்பெரு மன்றத்தில் நம் சங்கத் தலைவர் இராவ் பகதூர் முத்தமிழ் வள்ளல் திரு. ஆ. யா. அருளானந்தசாமி நாடார் அவர்கள் தலைமையில் ஒரு மாபெருங் கூட்டம் நடைபெற்றது. அரசியல் கொள்கை முதலான வேறுபாடுகள் கருதாது தமிழ் மக்களும் தமிழன்பர்களும் திரளாகக் குழுமி யிருந்தனர்.

தஞ்சை வழக்குரைஞர் இராவ் சாகிபு திரு. S. சுயம்பிரகாசம், B. A., B. L., M. L. A., அவர்களும், ஆசிரியர் திரு. ந.மு. கோவிந்தராய நாட்டார், M.A., L. T., அவர்களும், ஓய்வு பெற்ற மருத்துவர் திரு. கோ. தியாகராச பிள்ளை, G. M. V. C., அவர்களும், திருச்சிராப்பள்ளி வழக்குரைஞர் திரு. தி. பொ. வேதாசலம் பிள்ளை, B. A., B. L, அவர்களும், கூட்டத்தில் சிறப்பாகக் கருதவேண்டிய பொருள்களைக் குறித்து விரிவாகப் பேசி விளக்கினார்கள். அதன் மேல் அடியிற் காணும் முடிவுகள் ஒத்த கருத்துடன் நிறைவேற்றப்பெற்றன.

I. 1. தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளுவம் ஆகிய மொழிகள் திராவிட மொழிகள் ஆனபடியாலும், அம் மொழிகளெல்லாம் தமிழ் மொழியினின்று தோன்றியவையான படியாலும், அம் மொழி பேசும் மக்கள் எல்லோரும் திராவிட இனத்தவர் ஆனபடியாலும், சென்னை மாநிலம் இன்றுளது போன்றே இம் மக்களது கூட்டாட்சியில் இருப்பது விரும்பத்தக்கது என்றாலும், உடன்பிறந்தாரில் ஒருவரான தெலுங்கர் பிரிந்து போக இப்போது கிளர்ச்சி செய்து வருவதால் அவர்களைக் கலவரமின்றி பிரிந்துபோக விடுவதே நல்லதென்று இக் கூட்டம் கருதுகின்றது.

2. ஆனால் தெலுங்கர் தமக்குரிமை யில்லாதனவும், தமிழர்க்கே உரியனவுமான பகுதிகளை இயற்கை யமைப்புக்கு மாறாகவும், வரலாற்றுச் சான்றுகளுக்கு மாறாகவும் தமக்குச் சொந்தமாகக் கேட்பதை இக் கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

3. தமிழக வட எல்லை வட பெண்ணை என்பதையும் நெல்லூர், சித்தூர் மாவட்டங்கள் தமிழகத்தைச் சேர்ந்தவை என்பதையும் இக் கூட்டம் வலியுறுத்துகிறது.

4. சென்னை, தமிழர்க்கும் தமிழ் நாட்டுக்குமே உரியது என்பதை வலியுறுத்துவதுடன் அதனைத் தங்கள் தலை நகரமாகவோ தமிழர்க்கும் தங்கட்கும் கூட்டுத் தலை நகரமாகவோ இருக்கவேண்டுமென்று தெலுங்கர் கோருவதை இக் கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

5. மேற்கூறியாங்கு சென்னையைத் தங்களது தலைநகராகவோ, கூட்டுத் தலை நகராகவோ அமைக்க முடியாது போனால் அந் நகரைத் தனியாட்சி நிலமாக ஆக்க வேண்டுமென்று தெலுங்கர் விரும்புவதை இக் கூட்டம் வன்மையாக எதிர்க்கின்றது.

6. நாட்டுப் பிரிவினை பற்றி உசாவி யறிந்து முடிவு காண வந்துள்ள திரு. நீதிபதி வாஞ்சு அவர்கள் இயற்கை யமைப்பையும் வரலாற்றுச் சான்றுகளையும் தமிழர் மன நிலையையும் கண்டு தக்க முறையில் தாங்கி உரைக்கும்படி இக் கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

II. 1. இலங்கைத் தீவு தமிழகத்தின் ஒரு பகுதியாக இருந்து வந்தது வரலாற்று உண்மையாகவும், தமிழர்களே வாழும் பகுதி இன்றும் அங்கிருந்து வரவும், அந் நாட்டின் வளத்துக்குத் தமிழர்களே பாடுபட்டவர்களாக இருந்தும், அந் நாட்டு ஆட்சியாளர் தமிழர்க்குரிய குடியுரிமையை மறுத்து ஊறு செய்து வருவதை இக் கூட்டம் வன்மை யாகக் கண்டிக்கின்றது. இந்திய அரசாங்கம் இதுபற்றி போதிய அக்கரை காட்டாது வாளாவிருப்பதைக் கண்டு இக் கூட்டம் வருந்துகிறது.

2. தமிழர்கள் மிகுதியாகவுள்ள இலங்கை, மலேயா, தென் ஆப்பிரிக்கா, பர்மா முதலிய நாடுகளுக்குத் தூதுவ ராக இதுவரை தமிழர் அல்லாதவர்களே நியமிக்கப்பட்டு வருவதாலும், அன்னவர்கள் அந்தந்த நாட்டுத் தமிழர் களோடு தக்கபடி உறவு வைத்துக்கொண்டு அவர்களது குறைகளைப் போக்கத் தக்க வழிகளைத் தேடாதிருந்து வருவதாலும், தமிழர்களுடைய குறைகளை இந்திய அரசாங்கத்துக்கு உள்ளபடி எடுத்துரைக்காமல் இருந்து வருவதாலும், இந்த நாடுகளுக்கு இனி இந்திய நாட்டுத் தூதுவராக உடனடியாகத் தக்க தமிழர்களையே தேர்ந்து அனுப்புமாறு இந்திய அரசாங்கத்தை இக் கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

சங்கச் சார்பில் 31—1—53-இல் பின்னும் ஒரு மாபெருங் கூட்டம் நடைபெற்றது. அதுபோது திருச்சிராப்பள்ளி, திரு. கி. ஆ. பெ., விசுவநாதபிள்ளை அவர்கள் கூட்டத்தின் கருத்தினையும் தமிழ் மக்கள் ஆற்றவேண்டிய பணிகளையும் குறித்து விரிவாகப் பேசிக் குழுமியிருந்தவர்கள் தம் கடமை உணரச் செய்தார்கள். அதன் மேல் தமிழ் நாட்டு எல்லை குறித்த முடிபு ஒன்றும் அடியிற் காணுமாறு கூட்டத்தினரால் ஒரு படியாக நிறைவேற்றப் பெற்றது. 1911-இல் வட ஆர்க்காடு மாவட்டத்தில் இருந்து சித்தூர் மாவட்டத்தில் சேர்க்கப் பெற்றுள்ள ஆறு வட்டங்களையும் பிரித்துப் பழைய படியும் வட ஆர்க்காடு மாவட்டத்துடன் சேர்க்கவேண்டு மென்றும், சென்னை நகரம் தமிழருடையதே என்றும், அதில் ஆந்திர நாட்டின் தலைநகர் சில நாட்கள் கூட இருத்தலாகாது என்றும், ஆந்திர நாடு பிரிக்கப்பட்ட பிறகு எஞ்சியுள்ள நிலப் பரப்பிற்கு தமிழ் நாடு எனப்பெயரிட வேண்டு மென்றும், சென்னை மாகாண மெனப் பெயர் இருத்தலாகாது என்றும் இப் பெருங் கூட்டம் முடிவு செய்கின்றது.

இம் முடிபுகள் உரிய ஆணையாளர்களுக்கும் அறிவிக்கப் பெற்றன.

பாராட்டு.

இராவ்சாகிபு திரு. ப. சம்பந்த முதலியார் அவர்கள், B. A., B. L.,

தமிழறிஞரும் நாடக ஆசிரியரும் சிறந்த வழக்குரைஞரும் நம் சங்கத்தின் 32-ஆவது ஆண்டுவிழாவில் நாடகத் துறைக்குத் தலைமை தாங்கியவரும் ஆகிய இராவ் சாகிபு திரு. ப. சம்பந்த முதலியார் அவர்கள் எண்பதாவதாண்டு நிரம்பப் பெற்றநாளில் அவர்களைப் பாராட்டிப் பின்னும் அவர்கள் பல்லாண்டு பல்லாண்டு நோய் நொடியின்றி வல்லுடம்புடன் அவர்கள் தமிழ்ப்பணி சிறக்க வாழ வேண்டுமெனத் திருவருளை நினைந்து வாழ்த்துகின்றோம்.

சென்னையில் 1—2—53 ஞாயிற்றுக்கிழமை முத்தமிழ்த் துறையிலும் ஈடுபட்டுள்ள அறிஞரும் பொதுமக்களும் குழுமித் திரு. பிள்ளை யவர்களை வாழ்த்தியும் பாராட்டியும் கையுறை வழங்கியும் மகிழ்ந்தார்கள்.

கருந்திட்டைக்குடி கல்வெட்டு.

வித்துவான் திரு. சி. கோவிந்தராசன், தலைமைத் தமிழாசிரியர்.
உமாமகேசுவர உயர்நிலைப்பள்ளி, கரந்தை.

(இக் கல்வெட்டு இவ்வூரிலுள்ள வசிட்டேசுவரர் ஆலயத்தின் கருப்ப இல்லின் மேலைப்புறச் சுவற்றிலுள்ளது.)

ஸ்வஸ்தி ஸ்ரீ திருமகள் போலச் பெருநிலச் செல்வியும், தனக்கே யுரிமை பூண்டமை மனக்கொளக் காந்தளூர் சாலைக் கலமறுத்தருளி, வேங்கை நாடும் கங்கபாடியும், நுளம்பபாடியும் தடிகைபாடியும், குடமலைநாடும் கொல்லமும் கலிங்கமும், எண்டிசை நிகழ ஈழமண்டலமும், திண்டிறல் வென்றி தண்டாற் கொண்டு தன்னெழில் வளரூழியுளெல்லாயாண்டுந் தொழுதக விளங்கும் யாண்டே செழியரைத் தேசுகொள் ஸ்ரீ கோவிராஜராஜ கேஸரி பண்மர்க்கு யாண்டு ௰எ-ஆவது நித்த விநோத வளநாட்டு நல்லூர் நாட்டு பிரஹமதேயம் ஸ்ரீ ராஜகேஸரி சதுர்வேதி மங்கலத்து மஹாசபையோம் விற்ற நில விலையாவணம் நம்மையுடைய சக்ரவர்த்தி பிராமணவூர்களில் பிரஹமணர்க்கு கீழ்ப்பபட்ட ஜாதிகளிலார் காணிகளில் பணி செய்மக்கள் பணிசெய் காணியொழிய நின்றுார் காணி.... வன்றருளச் செய்ய புக்க கேழ்விப்பட்ட அதிகாரிகள் வானவன் மூவேந்தவேளார் அடைவு குத்துவித்து வரிசை விட்டபடி விற்றுக்காசு தண்டுக வென்றருளிச் செய்து உடையார் பணிமகன் சாத்தம்பியை ஏவ இச் சாத்தம்பியார் தண்டமஹா ஸபையோம் விற்ற நிலவிலையாவணம்.

நம்மை உடைய சக்ரவர்த்தி ஸ்ரீ பராந்தகதேவர் திருமகளார் ஸ்ரீ குந்தவை பிராட்டியார் இந் நித்தா விநோத

வளநாட்டுத் தஞ்சாவூர் கூற்றத்துத் தஞ்சாவூர் புறம்பட்டி வடவாற்றின் வடகரை கருந்திட்டைக்குடி தேவர்க்குத் திருநொந்தா விளக்கு வைப்பதற்காக இ ஸ்ரீ பராந்தக தேவர் திருமகளார் ஸ்ரீ குந்தவைப் பிராட்டியார்க்கு மஹா சபையோம் விற்றுக் கொடுத்த நிலமாவது—

இவ் விராஜகேஸரி சதுர்வேதி மங்கலத்து நாதொங்க வதிக்கு மேற்கு ஏழாங் கண்ணாற்று இராஜகேஸரி வாய்க் காலுக்கு 3-ஆம் சதிரத்து வடக்கடைய மூன்று மாவும், நாதொங்கவதிக்கு மேற்கு 4-ஆம் கண்ணாற்று இராஜ கேசரி வாய்க்காலுக்கு தெற்கு 2-ஆம் சதிரத்து தெற் கடைந்த (வ) கால் தெற்கடைந்த (பசபு) ஒருமாவரையும் ஆக நான்மாவரை செய்யும் விற்று விலையாவனம் செய்து குடுத்தோம். ஸ்ரீ பராந்தகதேவர் திருமகளார் ஸ்ரீ குந்தவைப் பிராட்டியார்க்கு ஸ்ரீ ராஜகேஸரிச் சதுர்வேதி மங்கலத்து மஹாசபையோம். இந் நிலன் நான்மாவரை செய்யும் விற்று விலையாவணம் செய்து குடுத்துக்கொண்ட விலைப்பொருட் காக ஈழக்காசு வாசி படாமைச் செல்லுங் காசு.... எண் பத்தொன்றறையேய் மூன்று மா அரைக்காணிக்கு கீழ்ப் பட்ட ஜாதிகளிலார் காணி.......ப்பித்து இந் நில........வேய் விலையா வணம் இதுவேய் பொருமாவறுதிப் பொரு........ விலையும் இதுவேய் ஆவதாகவும் இதுவல்லது வேறு பொரு மாவறுதிப் பொருட்செலவோலைக் காட்டக் கடவாரல்லா தாராக இப் பரிசு ஒட்டி விலைக்கறவிற்றுப் பொருளறக் கொண்டு விலை யாவணம் செய்து குடுத்தோம் நம்மை யுடைய சக்ரவர்த்தி ஸ்ரீ பராந்தக தேவர் திருமகளார் ஸ்ரீ குந்தவைப் பிராட்டியார்க்கு ஸ்ரீ ராஜகேஸரி சதுர்வேதி மங்கலத்து மஹா ஸபையோம்,

பணியால் இவ்வூர் மத்யஸ்தன் திருவேங்கடவன் ஆயர் கொழுந்தினேன் இவை யென்னெழுத்து. இப்படி அறிவேன் இவ்வூர் வைகானஸன் காஸ்யபன் ஸ்ரீ வாசு தேவன் ஆராவமுதினேன். இப்படி பணியால் மத்யஸ்தன்

வேங்கடவன் அரங்கனேன் இவை யென்னெழுத்து. இப்படி பணியால் மத்யஸ்தன் வில்லி காடந்தனுன மங்க லாச்சனேன் இவை என்னெழுத்து. இப்படி பணியால் ....கௌதமன் கோவிந்தன் சிங்கப்பி............னென் னெழுத்து. இப்படி பணியால் மத்யஸ்தன் அரங்கம் பூதியான மங்கலோத்தமனேன் எழுத்து. இப்படி பணி யால் இவ்வூர் வேடகோவன் புறம்பியன் னெச்சில் மண்டை என்னெழுத்து. இப்படி பணியால் மத்யஸ்தன் அரங்கன்............ங்கனுன சாதுப்பிரியனேன் இவை என் னெழுத்து. இப்படிப் பணியால் இவ்வூர் வேடகோவன் பொய்யிலிதேவன் எழுத்து. இப்படிப் பணியால் இவ்வூர் வேடகோவன் நக்கன் முத்தரையனேன் எழுத்து.

இப் பதினேழாவதே இவ் வோலை மேற்பட்ட நிலம் நான்மாவரையும் இத் தஞ்சாவூர்ப் புறம்பட்டி வடவாற் றின் வடகரை இக் கருந்திட்டைக்குடித் தேவர்க்கு சந்தி ராதித்தவரை நொந்தா விளக்கு வைப்பதற்கு இத்தே வர்க்கே யுரித்ததாகக் குடுத்தேன் பராந்தகன் குந்த வையேன்

இப் பிராட்டியார் அருளிச்செய்ய எழுதினேன் இவர்க்கு அதிகாரஞ் செய்கின்ற சிறு பேருடையான் கொ......ன் தென்னவன் எரியூர் நாட்டு வேளானேன் இவை என்னெழுத்து. இப் பரிசு...... அறிவேன். இப் பிராட்டியார்க்கு அதிகாரஞ் செய்கின்ற நாகமங்கிழான் அங்காடி சூற்றியனென் இவை என்னெழுத்து. இப்படி குடுத்தவை அறிவேன் இப் பிராட்டியார் கணக்கு பூவ ணூருடையான் வரகுணன்......இவை என்னெழுத்து. இப்படி குடுத்தமை அறிவேன் ஆழ்வார் கரணத்தான் மருதங்குடையான் மாயிலட்டி ஆச்சனென்.

அறச்செயல் :- ஸ்ரீ இராசகேசரி சதுர்வேதி மங்கலத்து மகாசபையோரால், பராந்தக தேவரின் திருமகளார் குந்தவை பிராட்டியார், கருந்திட்டைக்குடி, வடவாற்றின் வடகரையி லெழுந்தருளியுள்ள வசிட்டேசுவரருக்கு திரு நொந்தா விளக்கு வைப்பதற்கென்று, இராசகேச சதுர் வேதி மங்கலத்திலுள்ள நாலரைமா நிலத்தினை, ஷை யாருக்கு விற்றுக் கொடுத்துள்ளனர்.

மக்களின் மாண்பு :— இக் கல்வெட்டு முதலாம் இராச ராசனின் பதினேழாவது ஆட்சி யாண்டில் எழுந்த தாயினும், பொன் மாளிகையிற் றுஞ்சியவரும், தமது அரசரின் தந்தையுமாகிய பராந்தக தேவரிடத்து, மக்கள் எத்துணை பெருமதிப் புடையராகத் திகழ்ந்தா ரென்பது 'நம்மை உடைய சக்கரவர்த்தி ஸ்ரீ பராந்தக தேவர் திருமகளார் குந்தவை பிராட்டியார்' என்று குறிப்பிட்டுள்ளதினுற் றெளிய ஏதுவாகின்றது.

குந்தவையாரின் சிறப்பு :— இப் பிராட்டியார் அறச் செயல்களில் பெரிதும் ஈடுபாடுடையா ரென்பதுடன், இவருக்குரிய காணிகளும் பிற சொத்துக்களும் இவரது அதிகாரிகளினுலேயே இராசராசனது காலத்திலேயும் கண் காணிக்கப் பெற்று வந்தன என்பது, இப் பிராட்டியார் அருளிச் செய்ய எழுதினேன் இவர்க்கு அதிகாரஞ் செய் கின்ற சிறு பேருடையான்........தென்னவன் எரியூர் நாட்டு வேளானேன், இப் பரிசு அறிவேன் இப் பிராட்டியார்க்கு அதிகாரஞ் செய்கின்ற நாகமங்கிழான் அங்காடி சூற்றிய னேன், இப்படி கொடுத்தவை அறிவேன் இப் பிராட்டி யார் கணக்கு பூவணூருடயான் வரகுணன் என்பனவற் ருல் தெளிவாகின்றன.

★ பரத சாத்திரம். ★

இந் நூல் நாட்டியம் பழகுபவர்கட்கும் பழக்குபவர் கட்கும் இன்றியமையாத சிறந்த அரிய நூலாகும். 182 பக்கங்கள் கொண்டது. பாவ வியல், இராக வியல், தாள வியல், ஓழிபியல் என நான்கு இயல் களும் தெளிவுரையும், அடிக்குறிப்பும் உள்ளன.

விலை ரூ 1—8—0

(அஞ்சற் செலவு வேறு.)

திருமுருகாற்றுப் படை

திரு. K. சோமசுந்தரம் பிள்ளை, B. A., B. L., தஞ்சை.

(முற்றொடர்ச்சி துணர் உஅ, ம, பக்கம் 304.)

புறவழிபாட்டின் மூலம், தன்னையும் உடலையும் பகுத்துக் கண்டு மெய்யறிவுற்ற உயிர், அவ்வறிவின் வழி அகத்தினிமை யுற, மெய்ம்முயற்சி அதற்கு வேண்டற்பாலது. விழியும் மனமும் ஒன்றுபடும்படிச் செயயும் முயற்சியில் உயிர்தலைப்பட்டு மெய் யுணர்வுபெறற்கு அகவழிபாடு இன்றியமையாதது. அக வழி பாட்டால் அன்பு பெருகியெழ, பேரறிவு இறையன்பில் அரும்பி விளக்கமுறும். எனவே, இறையன்பில் தோய்ந்து பேறு பெற, அக வழிபாட்டின் வழி, உள்ளம் உரு மூன்றுமாகி உணர் வரிதாம் மெய்ப் பொருளுக்கு உறையுளாக அமைய வேண்டும் அதுபோது புடமிட்டுத் தூயதாய உள்ளொலி ஆக்கமும் ஆற் றலுமுற்று நலம்பெறும்நிலை கொள்ளவே, இதய மன்றில், நினை யப்பிறருக்கரிய நிருத்தக்கனல் ஒளி விடும். இதனை நெறிப்பட உள்ளே வளர்க்கின் விருத்தர் தாமும் பாலராக, உறுப்பும் பொன் வண்ணமாகும். உரோமும் கறுக்கும். இக்கனலைச் சார்ந்த உயிர், புலன், உடம்பு முதலியவை ஒருங்கு சேர்ந்து இறை யுணர்வுடன் ஒன்றியக் காலை, உண்மை அன்பு, அறிவு, ஆற்றல், அழகு, அமைதி, இன்பம் முதலிய நிலைகள் கவடுவிட்டு எழும். இவ் வகையான் இறையுடன் ஒன்றிக் கலத்தலே, வாழும் மக்களுயிர்களின் வளர்ச்சிக்கோர் பேரெல்லையாகும்.

இறைப்பேறே பிறவிப் பயனெனக் கருதிய நக்கீரர், இயல்பு திரியாதிருக்கும் இரு மூன்று வகை திறப்பட்ட நிலைகளையே படை வீடுகளெனக் கொண்டு, உள்ளக் கடவுளே. உண்மை அவனே அறிவு, அவனே இன்பம் என நிலைநாட்டினர். திருப் பரங் குன்றம், அசைதலில்லாத அறிவு—இன்ப நிறைவினைக் குறிக்கும். அசுரர் களிமழைத்த இடையூற்றுக்கு இடையூறாய் முருகன் அறிந்து நின்று அருள் புரிந்ததற்கு வெற்றிப் பரிசி

லாக தெய்வயானை அம்மையாரை, விண்ணவர் கோமான் நல்கி னமையும், அதனுன் முருகன் வெற்றிக் கோலத்தோடு மணக் கோலமுங் கொண்டு இன்புருவமே வாய்ந்து நின்றதையும் 'மறு வில் கற்பில் வாணுதல் கணவன்' என்ற வரியின்கண் வற் புறுத்தப்பட்ட குறிப்புண்மை உணர்தற்பாலது. இதனுன் முதற்படை வீடாகிய பங்கமற்ற பரங் குன்றின்மீது இறை தனது ஆற்றலாகிய திருவருளால் உலகெலாம் ஆக்கி அளிக்கும் வாகைத் தன்மையும், இறையின் இன்ப வுருவம் முற்றறிவுடை மையும் பெறப்பட்டமை காண்க. மனம், அவாவாகிய அலை யினுல் அலைப்புண்டு, பின் அறியாமை அறியப் பெற்றும் அலை வற்றும் அறிவதனையேபற்றி அறிவு இன்பத்திலே அடங்குவதை உணர்த்துவது திருச் சீரலை வாயாகும். திருவாவினன்குடி என்பது திரு, ஆ, இனன், குடி என்ற நாற் சொற்களாலாயது. திருவென்பது யாவராலும் விரும்பப்படும் தன்மை. ஆ என்பது பசுவாகிய உயிர் என்க. இனன் என்பது செழுங்கதிரொளி யுடைய ஞாயிறு. இம்மூன்றும் ஒன்று கூடி ஒள்ளொளி ததும்பத் திகழ்ந்து விளங்கும் இடம் திருவாவினன் குடியாகும். இன்பத்தோடு கூடிய அறிவு வெள்ளம் மெய்யுணர்வாக நிறை யும் நிலையினை அருளொளியால் அறிந்து தெளிந்த உயிர் உள்ள மெலாந்தழைக்க, உள்ளபடி உள்ள பொருள் உள்ளவனுய் நின் ருனைக் கண்டு மெய்ஞ்ஞானத் தேனையுண்ணும் நிலையினைச் சுட்டும் இன்ப நிலையம் திருவேரக மென்க. குன்றுதோருடல், அலைவிலாத மெய்யுணர்விற்கு முதற்காரணமாயுள்ள துரிய நிலையினைக் குறிக்கும். துரிய நிலையில் மெய்யுணர்வை வைத்து உள்ளாழ்ந்தார்க்கு உயிரின் இரு விகாரமாய பிறப்பு இறப்பும் மனத்தின் இரு விகாரமாய இன்ப துன்பமும் இலவாம். விழிப்பு, துயில், மறப்பு, துரியம், துரியா தீதம் என்ற ஐந்துணர்வுப்படி களையுடைய மலை மீதேறிக் குவடு சென்ருல் ஆங்கு அருளின்ப ஆடல் விளங்கக் காணப்பெறும். இதனைக் கண்டுணர்ந்த சித்தமலமிலா மக்களே கடவுட்டன்மை யெய்துதற்குரியர். எலும்பும் தசையும் சேர்ந்து பொருந்திய பழம் போன்ற உட லும் மிகையெனக் கொண்டு, இந்திரிய இன்பப் பழங்களை சுவை யாது, உயிர் தன் தோற்றம், மாற்றம், ஏற்றம் முதலியவை அறிந்து, தன்னை அறியும் அறிவால் அறிவுறுதி கொண்டு, கண் ஒளியுடன் ஒன்றுவது போன்று, அறிவின் ஒளியால் இறைவனை இரண்டறக் கலந்து விளங்கும் இடம் பழமுதிர்ச் சோலை யென்க.

அகனுணர்வு தெளிவுகொண்டு செலற் பொருட்டு, ஐந்திணை இயற்கைகளை ஆற்றுப்படையின்கண் ஆயும் புலம்படைத்த நக்கீரர், அலையாது இறைபால் நிலைத்த மனமே நிலை பேறுகும் என்பதை உணர்த்தியிருத்தலும் நுனித்தறிந்து மெய்ம்மை

தேறற்பாலது. மனத்தை அடக்கும் ஆற்றல் இறுதியில் பருமை யுற நிற்கும் உடலையும் தகர்த்து, சகச்சுராரத்தில் உள்ள காரண உடலை அடையச் செய்யும். இஃதே அழிவு எனும் குணம் ஒழிவதாகிய இடமாகும். அதுபோது உய்கைவளம் தந்தருளும் நலமார் முரட் குமார வடிவம், உற்று நோக்கப் புல னாகும். இதனையே நக்கீரர்

> ‘தெய்வம் சான்றதிதில் விளங்கு உருவின்
> வான்தோய் நிவப்பின் தான்வந்துஎய்தி
> அணங்குசால் உயர்நிலை தழீஇப் பண்டைத்தன்
> மணம்கமழ் தெய்வத்து இளநலம்காட்டும்’

என்று உணர்த்துவராயினர். (நிவப்பு—பிரணவ வுச்சி; தான்—முருகக் கடவுள்) இக் குமாரவேள், அஞ்சல் ஓம்புமதி! அறிவல் நின் வரவு! என வழிகாட்டிவிட, குணங்குறியற்ற சிவம் வெளிப்படும். எனவே, ஐம பெரும் பொருளின் வழி ஊடுருவி நின்று உயிருக்குத் துணையாற்றும் சிவகுருவின் நிலை யும், ஞாயிற்றின் ஒளியும், ஐவேறு இயற்கைப் பொருள்களும் மக்களது தெய்வத்தனமையாய வாழ்விற்கு எத்தகையவாறு இன்றியமையாதனவாய் வாய்ந்துள்ளதை நக்கீரர் அறி வுறுத்தும முறை, குமரன்றனதாதையை யுணர்தற்கு வழி கோலும வகையாய் அமைந்துள்ள தென்பது தெளியப்படும்.

இதனுன், நிராதாரத்தைப் பெறற்குமுன், உயிர் ஐம் பூத நிறையுடைய உடலுக்குள்ளே. மூலாதாரம் முதலாகக் கூறப் படும் ஆறு நிலைகளையும் படிப்படியே கடந்து செலல் வேண்டும் வகை அறியப்பெற்ரும். ஆறு ஆதாரங்களையும் மலர்ப்பிக்க, மூலாதாரத்தின் கண் உறங்கும குண்டலினி சக்தியைக் குமுறி எழும்படிச் செய்ய முற்பட்டால் அஃது சகச்சுராரத்தை நோக்கி ஞானமயமாகிய முத்திச் செல்வத்தை அவாவி நிற்கும். அவ் வகையானே, அது, முருகு கொண்டிடும் கலப்பினை எய்திய வழி இறையருள் விளக்கம முருகன் மூலம, உயிருக்குப் புலனாகும். இத்தகைய கலப்புமாண்பினில் உயிர் படிந்திருக்கும் படிப் பினையே திருமுருகாற்றுப்படையின் பயனாகும்.

> எந்தை பிரானுக் கிருமூன்று வட்டமாய்த்
> தந்தை தன்முன்னே சண்முகந் தோன்றலாற்
> கந்தன் சுவாமி கலந்தங்கிருத் தலான்
> மைந்தனிவ னென்னமாட்டிக் கொளீரே.

என்பது திருமந்திரம். 'பட்டறி, உற்றறி பத்தெட்டிறுத்தறி என்ற முதுமொழிக் கிணங்க, இதன் பயனை மேலும் ஆயின், உயிர், தவயோகவுணர்வில மலரும அறிவால், துரியநிலை கடந்து போந்து தெய்வ மண முருகு நாறும சிவபோகத திலழுந்தி அனு பவிக்கும் முறையின் நீர்மையினை உணர்ந்து போற்றிக் கடைப் பிடித் துய்யும் வகை தெளிந்து கொள்ளப்படும். ஆகவே விருப் பொடு வெறுப்பிலாத மெய்மமையார் தாம உலகியலபும உயிரி யல்பும் உண்மை யியல்பும் ஒருங்குணர்ந்து அகமுக நோக்கி, என்று முளதாகிய விழுப் பொருளுக்கும தமக்கு முள்ள நெருங் கிய தொடர்பைத் தேறி, முடிவில் திருவருளைக் கூடுவ ரென்பது பெறப்படும்.

மக்கள் உறவிற்கு அன்பும் அருளும் அகத்தூய்மையும் வேண்டற்பாலது கண் கூடாம். அஃதே போன்று இறையுற விற்கும் இவையும் பன் மடங்காக வேண்டப்படுவது தெளிவு. மற்றும் தெய்வப்படிக்கு உயர்த்தும் நிலை பேறுடைய உண்மை, அழகு செமமையாகிய இம்மூன்றும் இறையுறவால் ஆற்றலுற்று இறைப்பொலிவுறும். எவ்வகையுயிர்க்கு முயிரென விருக்கும் இயல்புடைய முருகன் பேருண்மையும், பேரழகும் வரம்பிகந்த செம்மை நலனுமுடைய கலையுருவினன். சங்கத் தமிழின் தலை மைப் புலமையாளன்; கலையறிவு ஆய்ந்து நாடும பெருந்தகைமை யன். கலையறிவால் ஆயப்படும பொருள், இன்புருவாய் விளககு முறின், அதனை நாடி உணரும் உயிர், பேரின்பப் பயனை நுகரு மென்பதில் ஐயமில்லை.

> இரு சுடரோடிய மானினம் பூதமென்
> றெட்டுவகை யுமுயிரும் யாக்கையுமாய்க்
> கட்டி நிற்போனும் கலையுருவி னோனும்
> படைத்து விளையாடும் பண்பினோனுந்
> துடைத்துத் துயர்தீர் தோற்றத் தோனுந்
> தன்னில்வேறு தானொன்றி லோனு
> மன்னோ னிறைவனாகும்.

என்ற மணி மேகலையின் மணித் திருவாக்கு ஈண்டறிந்து இன்புறற்பாலது. கருதுவோருக்கு அண்மையராகிய முருகனை அச்சந்தரும் இறையாகப் பண்டைத் தமிழர் கருதிவந்த உண்மை

'அணங் குடை முருகன் கோட்டம்' (புறம் 299)
'அருங் கடிவேலன்' (மதுரைக் காஞ்சி 611)

முருகயர்ந்து வந்த முதுவாய்வேலன்
சினவ லோம்புமதி — (குறுந்தொகை 362)
கார்நறுங் கடம்பின் கண்ணிசூடி
வேலன்வேண்ட வெறிமனை வந்தோய்!
கடவு ளாயினு மாக
மடவைமன் ற வாழிய முருக —(நற்றிணை 34)

எனக் கூறு முகத்தான் விளக்கமாகும். இறைய ஞரகப் பொருளுரையில் முருகனை 'குமார தெய்வம்' எனக் குறிப்பிட்டிருப்பதும் அறியப்படும். இன்தமிழ் முருகனை திருமுருகாற்றுப் படையில் சிவனுரது மைந்தனென்பது

'ஆல் கெழு கடவுட் புதல்வ!'

என்றதினுலும், உமைக் கினிமையான புதல்வன் என்பது,

'மலைமகள் மகனே!'
'கொற்றவை சிறுவ!'
'பழையோள் குழவி!'

என்பதினுலும், வேலைத் தாங்கியவ ரென்பது

'வேல்கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ!'

என்பதாலும்,
சூரனையும் கிரவுஞ்சத்தையும் அவர்கொன் றழித்தமை,

'சூர்மருங் கறுத்த மொய்ம்பின் மதவலி'
'குன் றங் கொன்ற குன்ருக் கொற்றத்து'

என வருபவனவற்ருல் தெளியப்படும். மற்றும் மெய்யடியார் உள்ளத்தே பைந்தமிழ் முருகன் அறுவகையாய் பொருந்தித் தோன்றும் திருமுக மோராறின் பெற்றிமையும், அத் திருமுகங் களுக் கேற்ப பன்னிரு திருக்கரங்களின் செயல்களும் திருச் சீரலைவாயினைப் பற்றிக் கூறும் பகுதியில் பெறப்படவைத்தது மிகவும் பாராட்டத்தக்கது.

இவ்வணம் முருகனைப்பற்றிய பழைய கருத்துக்களும் கொள்கைகளும் பலவகையான் விரவிவரும் சங்க மருவிய நூல் களைக் காணுங்கால், ஆதிக்கண் தமிழ்மக்கள் முருகனை மலைமீது நின்று பலிபெறாவும் அணங்கெனு அஞ்சினரென்பது புலப்படும். என்றும் உள்ளதிலிருந்து உறும் அச்ச வளர்ச்சி நாளடைவில் இயல்பாக அறிவு விளக்கமாய் மாறிப் படிப்படியாக வளர்தல் இயற்கையாகும். இவ்வியற்கை நிலைமைக்கேற்ப, அச்சமே முதற் படியின் கண் ஆசாரமெனக் கொண்ட பண்டைத் தமிழ் மக்கள் பின் அன்பாலும் அறிவாலும் அம் முருகனை இளமை குன்ருது அழகுடன் இலங்கும் இறையாக வரைந்தும் வடித்தும் இன்புற்று ஓம்பினர். இவ்வாறு இறையுணர்வாலும் இன்பாலும் எளிமை

யனைப் நின்றானப்பின்னை, இயற்கையின் தத்துவ நுட்பங்களுக்குப் பொருளாகிப் பொருந்தும் பலதிறப்பட்ட திருவுருவங்களால் தமிழ் மக்கள் பகுத்தறிவு கொண்டு வழிபடலானார். இத் திருவுருவங்களையே கொழுகொம்பாகக் கொண்ட தமிழர் தம் வாழ்வில் இயல்பாயமைந்த உடைமைகளை அவ் விறைக்கே உரிமையாக்கி, இறைவழிபாட்டைத் தழுவியும் பின்னியும் தம் வாழ்வு நிலைநிற்குமாறு வகைசெய்துகொண்டனர். இத்தகைய வாறு மக்களது மனவுணர்வும் அறிவும் வளருறும் நிலையில் திரு முருகாற்றுப்படை என்ற பாட்டின் ஓவியம் எழுந்ததென்பது தேற்றம்.

இப் பாட்டோவியத்தின் எழிலில் நெஞ்சம் ஊன்றிப் படியுங்காலை, முருகரது அழகுத்தோற்றம, பல்வகையாக மனத்துக்கண் படமாகித் திகழும். இந்நிலையில் ஈடுபட்டு நிற்கும நீர்மையர் தமது உள்ளத்தில் இறையினையும், உலகினிடத்தே தன்னையும் காணப் பழகித் தற்பயன் கருதாமை யென்னும் நன்னெறிக்கண் நிற்பர். புலனைந்தும் முனைப்பழிந்தும் மன மொழி மெய்களான் இறைவனை ஆர்வமுடன் வழிபட, உள்ளத்திலிருந்தே தெளிந்த அறிவும ஆற்றலும் சுரக்கும். பெருகிய தன்னறிவு உறுதியால் தன்னிலை புலனாகும். எனவே புலன்களுக் கெட்டாத இறைவனைக் காதலுணர்வும் அன்புணர்வும் கொண்டு அறிவினாற் காணும் அவாவினையும், இறைவனோடு இரண்டறக் கலந்து நிற்கும விருப்பினையும் புலப்படுத்துவதே வழிபாட்டின் உட்கோளாகும். இறைவனது திருவருளொான்றினை மட்டும் கருதும் உள்ள மோடியற்றும் பற்றற்ற வழிபாடு உள்ளத்துதித்த விருப்பினை பெறச் செய்யு மியல்புடையதினுன், பற்றுள்ளமாகக் கொள்ளும் கொள்கை யறிவு உண்மையான வழிபாட்டிற்கு முட்டுக்கட்டையாய் நிற்கும். 'பயன் பணிகேட்பது பற்றதுவாமே' என்பர் திருமூலர். கூர்ந்து சிந்திக்கின், வாழு முயிர்த்தொகைக்கும் இயற்கைக்கும் உண்மையாய விழைவுடன் இயற்றும் தொழிலே பற்றற்றதெனக் கொள்ளப்படும், செமம லுள்ளத்தின் நுவன்றிடற் கரிய எழிலும் இயல்பும் எத்தகையது கொல் என்பதை

'சேவடி படரும் செம்மல் உள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்பிரிந் துறையுஞ்
செலவுநீ நயந்தனை யாயின், பலவுடன்
நன்னர் நெஞ்சத்தின் இசை வாய்ப்ப
இன்னே பெறுதிநீ முன்னிய வினையே'

என்ற நக்கீரர் வாய்மொழி வழி நினைவு கூர்ந்து அதன் மாட்சி தெளிதல் வேண்டும்.

திருவேள்விக்குடி கல்வெட்டுகள்.

வித்துவான் திரு. வை. சுந்தரேச வாண்டையார், திருவையாறு.
(முற்றொடர்ச்சி, துணர் உஅ, மலர் ம, பக்கம் நஉம.

உய்யக்கொண்டார் வளநாட்டுப் பேராவூர் நாடு :—

உய்யக்கொண்டார் வளநாடு என்பது காவிரிக்கும் அரிசிலுக்கும் இடைப்பட்ட நிலப்பரப்பாகும். இதன் பிரிவுகளுள் ஒன்றே பேராவூர் நாடு. இது திருவேள்விக்குடிக்குத் தெற்கே சுமார் 10 மைல் தூரத்தில் இருக்கிறது. இந் நாட்டைச் சார்ந்த கூடலூர் இவ்வூர்க் கல்வெட்டில் குறிக்கப் பெற்றுள்ளது.

இதுவே யன்றித் திருவழுந்தூர் நாட்டு ஆனுங்கூரும், ராஜராஜவளநாட்டுப் பரவை நாட்டுப் பூண்டியும் குறிக்கப் பெற்றுள்ளன.

பழங்காலத்தில் ஊர்ச்சபை கூடும் இடம் :—

ஒவ்வொரு சதுர்வேதி மங்கலத்திலும் ஒவ்வொரு சபை இருந்தது அந்தச் சபையாரே கோயில் நிர்வாகத்தை நடத்தி வந்தனர். பூலோகமாணிக்கச் சதுர்வேதி மங்கலத்துச் சபையார், திருவேள்விக்குடி உடையார் கோயில் எடுத்துக் கட்டியில் கூட்டங் குறைவறக் கூடியிருந்து, திருவாவடுதுறை உடையார்க்கு மூலப்பிரத்தியராகிய ஆதி சண்டேஸ்வர தேவர்க்கு ஒரு நிலத்தை இறையிலிபிரமாணம் பண்ணிக்கொடுத்த செய்தியை விக்கிரமசோழன் காலத்து கல்வெட்டு அறிவிக்கின்றது எனவே, சபையார் திருக்கோயிலில் கூட்டங்கூடி, கோயிலுக்கு நிலத்தை விற்றல் வாங்கல்களில் சண்டேஸ்வரர் திருப்பெயரால் நிகழ்த்தி வந்துள்ளனர் என்று அறியக் கிடக்கின்றது.

இக்கோயில் கல்வெட்டுக்களின் மூலங்களில் சில.

இடம் :- அர்த்த மண்டபத்தின் தென்புறச் சுவர்.

1

(வரி)

(1) ஸ்வஸ்தி ஸ்ரீ யாண்டு ஆறுவது திருவே
(2) ழ்விக்குடி ஆழ்வார்க்கு உடைய
(3) பிராட்டியார் பிராந்தக மகாதேவியார் குடுத்
(4) த வெள்ளிக் கலசம் ஒன்று. இது நி
(5) றை நூற்று நாற்பத்து முக்கழைஞ்
(6) சு. இது பன்மாஹேஸ்வர ரக்ஷை.

2

இடம் :- அர்த்தமண்டபத்தின் தென்புறம்.

(வரி)

(1) திருக்கோயில் வாலக்கால் படைமட்டஞ் செ
(2) ய் வித்துத் தாடிப்படையும் பதினாலுக
(3) ல்லுஞ் செய்வித்தான் நல்லூர்த் திருவையாறு
(4) யோகி, இவ்வெழுத்து சுப்பன், பண்மாஹேஸ் வாரும் வண
(5) யரும் ரக்ஷை.

3

இடம் :- அர்த்தமண்டபத்தின் தென்புறம்.

(வரி)

(1) ஸ்வஸ்தி ஸ்ரீ இக்கல்லு
(2) வப்பித்தான் சமி
(3) தன் வேளான் சேர்வை.

4

இடம் :- அர்த்தமண்டபத்தின் தென்புறம்.

(வரி)

(1) ஸ்வஸ்தி ஸ்ரீ ௩ ஆவது ஆலூர்க் கூற்றத்து தென்ன மூ — — — — —

(2) யான் சூலபாணிவேள் சிழவன் வை — — —
(3) ல்லு.

5

இடம் :- அர்த்தமண்டபத்தின் தென்புறம்.

(வரி)

(1) யாண்டு ௩ ஸ்வஸ்தி ஸ்ரீ மணியில் கோட்ட்த்
(2) து அரும்பாக்க முடையான் சீயகஙுங்கஙுன —
— — — — —

6

இடம் :- அர்த்தமண்டபத்தின் தென்புறம்.

(வரி)

(1) ஸ்வஸ்தி ஸ்ரீ கோப்பரகேசரி பன்மற்க்கு
யாண்டு
(2) உத்தமசோழர்க்கு ச ஆவது திருவேழ்
(3) விக்குடி உடையார்க்கு இளையவாள்
(4) பெற்ற கைக்கோளர் பனையன்
(5) கோதண்டன் சந்திராதித்தவல் இட்டகாளம்
(6) இரண்டும் கிறை ௩௰௪ அழிவு — — —
(7) கடவார் — — —

7

இடம் :- தென்புறம்.

திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ ராஜராஜதேவர்க்கு யாண்டு பதினாருவதின் எதிராமாண்டு மீன நாயிற்றுப் பூர்வ பக்ஷத்து தஸமையும் நாயிற்றுக்கிழமையும் பெற்ற இரேவதி நாள் விருதராஜ பயங்கர வளநாட்டுக் குறுக்கை நாட்டு திருவேழ்விக்குடி உடையார் மணவாள நம்பி கோயில் தானத்தோம். உய்யக்கொண்டார் வளநாட்டு அம்பர் நாட்டு அம்பர் அருவக்லத அரையன் சீ வேதவனப் பெருமாளான தொண்டைமானுர் இக்நாயனுர் கோயிலுக்கு இத் தேவர்க்கு ஐஞ்சாவது துரிதத்திலே இக்கோயிலில் எழுக்தருளும் நாயன் மாரை வாணகோவரையரும் — — த்தரும், பண்ணிகளும்

நாளுழிபாலும் — — அ— — —லக் கருப்புக்கட்டியும் அப்பத்துக்கு நாழி உரி அரிசியும் உரிய் நெய்யும் கறியமுதுக்கும் அடைக்காய் அமுது உள்ளிட்ட விஞ்ஞானங்களுக்கும் இந் நாயனார் தேவதானம் திருவேழ்விக்குடி ஊரிலும், பேரம்பலம் பொன்வேய்ந்த பெருமாள் மங்கலத்திலும், இவர் காணிப்பற்றான நிலம் இரண்டே சிந்நமும் திருநாமத்துக் காணியுமாக தந்தபடிக்கு இவர் ஓலைப்படியே கல்லு வெட்டுகையாலும் இப்படிகளால் இந் நாயனார்க்கு வேண்டுவனவும் செய்து தானத்தில் உள்ளாரையும் நோக்குகையாலே — — நாங்கள் விண்ணப்பஞ் செய்த இடத்து இவனும் இவன் வம்சத்தாரும் அடிமையானபடி கல்யாணமுள்ள தனையும் இவர் வற்கத்தில்.

8

இடம் :- தட்சிணாமூர்த்தியை ஒட்டி மேற்குப்பக்கம்.

இத்தேவரை செய்வித்தான்
வளஞ்சியர் பணி செய்
மகன் காத்தெ ரெய்
சிங்கம்.

9

இடம் :- கருப்ப இல்லின் மேல்புறம்,

வீர நாராயணப் பல்லவரையர் பெ
ண்டாட்டி குணமல்ல நா
ணங்கை இட்ட கல்க்கு.

மாகுலவரும் எழுந்தருளுவித்துக் கொடுபோகையாலும், மணவாள நம்பியும் நாறு சாந்திள மூலைநாச்சியாரையும் விநாயகப்பிள்ளையாரையும் மாகுலவன் மலையன் எழுந்தருளுவித்துக்கொடுபோகையில் இவர்கள் எழுந்தருளியிருந்த இடம் ஆராந்து இதற்கு அர்த்தம் நேர் வேண்டுவது இவர் சாக்கு நின்றும் புறப்பட்டுக் குடுத்து அவர்கள் எழுந்தருளுவித்துக் கொடுபோந்து உடையார் திருச்சத்தி முற்ற முடையார் கோயிலில் எழுந்தருளுவித்து வைத்து இ— — காராட்டை நாளைக்கு பூசையும் வேண்டுவதும் செலுத்தி தானத்தாரையும் நோக்கி மணவாள நம்பியை எங்களுக்கு எழுந்தருளுவித்துத் தந்தும் கோயில்களுக்கு— — ன் னெடுக்கி நிச்சயிக்கையில் இக் கோயிலுக்கு நூற்றுக்கழஞ்சு பொன் தம்முடைய சாக்

கில் நின்றும் — — — இந் நாயனார் கோயிலில் ஒடுக்கியும், கூத்தாடி அருளும் பிரானாரையும இவர் நாச்சியாரையும் வேதவன நாயகரையும், நாச்சியாரையும், திருக்காம கோட்டமுடைய பெரிய நாச்சியாரையும், சுப்பிரமணியரையும் — — — இருவரையும், ஆள்கொண்ட நாயகரையும் நாச்சி யாரையும், — — — — இஷப தேவரையும் ஆளுடைய பிராட்டியாரையும் திருநாவுக்கரசு தேவரையும், சுந்தரர் பெருமானையும், பரவை நாச்சியாரையும் எழுந்தருளுவித்தும் திருவாபரணங்கள் வேண்டுவனவும், பரிகல பரிச்சின்னங்களும் உள — — — லெறில் குறைவு அறக் கோலிப்புகுத விடுகை யாலும் மணவாள — — — — சாத்தருளுகைக்கு நாள் ஒன்றுக்கு ஐஞ்ஞாழி அரிசியும், ஐஞ்ஞாழி பருப்பும்

10

இடம் :- கர்ப்ப இல்லின் வடபுறம்.

(வரி)

(1) ஸ்வஸ்தி ஸ்ரீ கோப்பரகேசரி பன்மர்க்கு யாண்டு ௰௪ ஆவது வட

(2) கரை நல்லாற்றூர் நாட்டு குணமலப்பாடி உடை யான் மாரசிங்கனாந வீரசேகர மூவேந்த வே.

(3) ளான் இத்தேவர்க்கு சந்திராதித்தவற் தண்ணீ ரமுது செய்ய வைத்த வெள்ளிக் கட்டம் +, இது உ௰ கழஞ்சு நிறை. இது பன் மாஹேஸ்வர ரக்ஷை.

11

இடம் :- கர்ப்ப இல்லின் வடபுறம்.

(வரி)

(1) கோப்பரகேசரி பன்மற்கு யாண்டு ௪-வது

(2) வடக்ரை நல்லூற்றூர் நாட்டு குணம

(3) லப்பாடி உடையான் அய்யன் மா

(4) ரசிங்க நான வீரசேகர மூவேந்த வேளா

(5) னென் திருவேழ்விக்குடி மாதேவர்க்கு

(6) ச் சந்திராதித்தவற் அமுது செய்ய வைத்த

(7) வெள்ளித் தளிகை + நிறை ஊர்க்கல்லால்

(8) நானூற்றுக் கழெஞ்சு, இது ஸ்ரீ கரணத்தார்

(9) ரக்ஷை

12

இடம் :- கருப்ப இல்லின் வடபுறம்.

ஸ்வஸ்தி ஸ்ரீ இரட்டபாடி ஏழரை இலக்கமுங் கொண்டு கொல்லாபுரத்து ஜயஸ்தம்பம் நாட்டி பேராற்றங்கரை கொப்பத்து ஆஹவ மல்லனை அஞ்சுவித் தருளி ஆனையுங் குதிரையும் பெண்டு பண்டாரமுங் கைக்கொண்டு வீரஸிம் ஹாஸனத்து வீற்றிருந்தருளிய கோப்பரகேசரி பன்மரான உடையார் ராஜேந்திர தேவர்க்கு யாண்டு எ—ஆவது ராஜாயி ராஜ வளநாட்டு குறுக்கை நாட்டு கங்கை கொண்ட சோழச் சருப்பேதி மங்கலத்து திருவேள்விக்குடி சிவப்பிராமணன் மாடலன் ஆதித்தன் சாத்தனும் இக்குடி திருநாரணன் திருவேழ் விக்குடியும் உள்ளிட்ட சிவப்பிராமணரோம். இவ்வூர் சிவப் பிராமணர் சிவசரண சேகரப் பிச்சியார் பக்கல் நாங்கள் கொண்ட காசு ഥള இப் பதினேழுங் கொண்டு பலிசையால் நிசதம் இருநாழி அரிசியுங் கறியமுதும் அடைக்காய் அமுது உள்ளிட்டன கொண்டு உச்சிப்போது ஒரு சந்தி லிங்கம் புராண தேவரை அமுது செய்விக்கக் கடவோமானோம் இவ்வூர் சிவப் பிராமணரோம்.

13

இடம் :- அர்த்தமண்டபத்தின் வடபுறச் சுவரில் துர்க்கையார் இருக்கவேண்டிய இடத்தின் அருகில் உள்ளது.

(வரி)

(1) இ துர்க்கையாரை செய்வி
(2) த் தான் திருவழுந்தூர் நாட்டு
(3) நெற்க் குப்பை உடையான் ஆ
(4) லன் பல தேவனை
(5) பாத்திர சேகரப் பல்லவரை
(6) யன்

14

இடம் :- தட்சிணா மூர்த்தியை அடுத்து மேற்கிலும் கிழக்கிலும் உள்ள கல்வெட்டு.

இத்தேவரைச் செய்வித்தான்
வளஞ்சியர் பணிசெய் மகன் காத்தெரெய்
சிங்கம்.

தமிழ் இலக்கிய மன்றம்.

தமிழர் திருநாள்.

வேங்கடங்குமரியே தமிழ்நாட்டு எல்லை.
சென்னைக்கு உரிமையுடையோர் தமிழரே.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ் இலக்கிய மன்றத்தின் சார்பில் தமிழர் திருநாள் 18, 19 தேதிகளில் பட்டமளிப்பு விழா மண்டபத்தில் சிறப்புறக் கொண்டாடப் பெற்றது. உதவித் துணை வேந்தர் திரு. எ. இராமநாதன் பிள்ளை முதல் நாள் விழாவிற்குத் தலைமை வகித்தார்

தலைவர் தம் முன்னுரையில், இத் தமிழர் திருநாளில் தமிழ் நாட்டு எல்லைத் தொடர்பாக முடிவு செய்வது பொருத்தம் ஆகுமென்றும் வடவேங்கடமும் தென் குமரியுமே தமிழ் நாட்டு எல்லைகள் என்றும், சென்னையே தமிழ் நாட்டின் தலை நகராக வேண்டும் என்றும் ஆந்திரர் அதில் பங்கு கேட்பது சிறிதும் பொருந்தாது என்றும் குறிப்பிட்டார்.

பின்னர் சொற்பொழிவாளர்கள் சிலப்பதிகாரத்தை முதற் பொருளாக எடுத்துக்கொண்டு ஒவ்வொருவரும் ஒவ்வொரு காண்டம் பற்றி ஆராய்ச்சி யுரை நிகழ்த்தினர்.

முதலில் பேசிய வித்துவான் மெ. சுந்தரம் அவர்கள் 'சிலம்பு' எனும் பொருள் பற்றிப் பேசுகையில் சொல்லே நன்கு ஒலிக்கின்றதென்றும், இச் சிலம்பு, நூல் முழுவதும் ஊடுருவி விரவிக் கிடந்து ஒலிப்பதால் 'சிலப்பதிகாரம்' எனும் பெயர் சிறப்புடையதென்றும். இது ஒரு முத்தமிழ்க் காப்பியம் என்றும் தனிப்பட்டதொரு குடிமகனுக்குக் காவியம் எழுத முற்பட்ட முறையில் இதுதான் முதல் என்றும், கண்ணகியை மிகுதியாகத் துயரப் படுத்திய பின்னர்தான் அவள் அருமை கோவலனுக்குத் தெரிய வந்தது என்றும், அவள் பாண்டியன்முன் வழக்குரைத்து வெற்றி கண்டது, இக்காலப் பெண்கள் உலகிற்குப் பெரும் வழிகாட்டி என்றும் குறிப்பிட்டார்.

அடுத்து 'புகார்க் காண்டம்' பற்றி வித்துவான் ஆ. பூவராகம் பிள்ளை அவர்கள் பேசினார். சிலப்பதிகாரத்தில்

ஒன்பது சுவைகளும் இடம் பெற்றிருப்பினும் இன்பம், அவலம், வீரம் என்ற மூன்று சுவையே முறையே மூன்று காண்டங்களிலும் விஞ்சி நிற்கிற தென்றும், மாதவியை நோக்கும் பொழுது கண்ணகியின் அருமை, பெருமைகள் நன்கு புலனாகும் என்றும், கண்ணகியையும் மாதவியையும் ஒரே தரத்தில் வைத்து மதிப்பிட முடியாதென்றும், புகார்க் காண்டம் ஒரே இன்பச் சுவை பொதுளிக் கிடப்பதென்றும் கூறினார்.

பின்னர் டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள் 'மதுரைக் காண்டம்' பற்றிப் பேசினார். தம் உரையில் 'நெடியோன் குன்றமும், தொடியோள் பௌவமும், தமிழ் வரம்பறுத்த தண்புனல் நன்னாட்டு' என்று சிலப்பதிகாரத்தில் வரும் அடிகளால், தமிழ் நாட்டு எல்லை வடக்கே திருவேங்கடமும், தெற்கே கன்னியா குமரியும் ஆகுமென்றும், குமரியானது, ஆறும், கடலும், மலையும் ஆக மாறிய செய்தி உரைகளால் அறியக் கிடக்கிற தென்றும் 'பஃறுளி யாற்றுடன், பன்மலை யடுத்துக் குமரிக் கோடும், கொடுங்கடல் கொள்ள' எனவரும் அடிகளும் மேற்கூறிய சான்றை வலியுறுத்தும் என்றும், சென்னைக்கு உரிமையுடையவர் தமிழரே என்றும், ஆந்திரர் அதில் பங்கு கொண்டாடுவது சிறிதும் பொருத்தமற்றது என்றும் குறிப்பிட்டார். 'வடவேங்கடம் தென் குமரியா யிடைத், தமிழ் கூறும் நல்லுலகத்து' என்ற தொல்காப்பியப் பாயிரத்தை யாரும் மறுக்கவோ, மறக்கவோ இயலாதென்றும் கூறினார்.

இறுதியாக வித்துவான் மு. அருணாசலம் பிள்ளை அவர்கள் 'வஞ்சிக் காண்டம்' பற்றிப் பேசுகையில், வீரச்சுவை ததும்பிக் கிடப்பது இக் காண்டம் என்றும், தமிழ் வேந்தரின் வீரம், இமயத்தில் தமிழ்க் கொடி பொறித்த நிகழ்ச்சியால் உலகறிந்ததாகி விட்டதென்றும், கண்ணகிக்கு நடுகல் அமைத்தபோது இலங்கைக் கயவாகு வேந்தன் போன்றோர் கலந்து கொண்டது தமிழ் வேந்தரின் பெருமைக்குச் சான்றாமென்றும், அவர்கள் நாட்டிலும் இக் கண்ணகி வழிபாடு செய்வித்தது கண்ணகியின் சீரிய கற்பை விளக்குவதாகும் என்றும் உரைத்தார்.

இறுதியாகத் தலைவர் தம் முடிவுரையில், தன்னைச் சிலப்பதிகாரம் படிக்கத் தூண்டியது டாக்டர் ஆர். கே. சண்முகம் செட்டியாரின் புகார்க் காண்ட உரையே என்

பொருந்துமா ? (கசு)

உ ள நூலாசிரியர் புலவர்மணி M. குஞ்சிதபாத தேசிகர், நன்னிலம்.

தமிழ் மொழியில் உள்ள இலக்கணங்கள் ஐந்து வகைப் படும். அவை முறையே எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்பனவாம். இவற்றுள் அணி இலக்கண மாகிய தண்டியலங்காரத்தில்,

"மன்றற் குழலா ருயிர்மேன் மதன்கடவும்
தென்றற் கரிதடுக்குந் திண்கணையம்—மன்றலரைக்
கங்குற் கடலிற் கரையேற்று நீள்புனையாம்
பொங்குநீர் நாடன் புயம்"

என்ற செய்யுள் அற்புத உருவக அணிக்கு உதாரணமாகக் காட்டப்பட்டுள்ளது.

இதன் பொருள் :— மேன்மேலும் பெருகிவரும் காவிரி யாற்றையுடைய சோழநாட்டின் அரசனாகிய சோழ அரச

றும், இளைஞர்கள் பழந் தமிழ் இலக்கியங்களை நன்கு கற்று வாழ்வில் அவற்றின் கோட்பாடுகளைப் பின்பற்றி வாழ வேண்டும் என்றும், இன்ப துன்பங்கள் இணைந்தே வரும் என்பதை சிலப்பதிகாரம் நன்கு எடுத்துக் காட்டுகிறது என்றும் குறிப்பிட்டார்.

இடையிடையே திருவாட்டி சிவகாம சுந்தரி, திரு வாளர்கள் மகாலிங்கம், பூபதி, இராமநாதன் ஆகியோரால் இசைப் பாடல்கள் பாடப்பெற்றன.

பின்னர் செயலாளர் கே. எ. திருஞான சம்பந்தம் நன்றி நவில விழா இரவு 8 மணி அளவில் இனிது நிறை வேறியது.

மறுநாள் 19 தேதி மாலை 5. 30 மணி அளவில் இசை மணி மயிலம் பி. வச்சிரவேலு முதலியார் அவர்களால் தக்க பின்னணி இசையரங்கம் ஒன்று நடைபெற்றது. விழா இரவு 8 மணி அளவில் நிறைவுற்றது.

அண்ணாமலைநகர்,
20—1—53.

கே. எ. திருஞானசம்பந்தன்,
செயலாளர்.

னது தோள் வாசனையையுடைய கூந்தலை யுடையவர்களாகிய பெண்களது உயிரின் மீது மன்மதன் செலுத்துகின்ற தென்றற் காற்றாகிய யானையைத் தடுக்கும் பாணமாம், புணர்ச்சிக்குரிய அம்மாதர்களை இரவாகிய கடலினின்று கரை ஏற்றுதற்குரிய தெப்பமாம், (என்ற உரையும்)

இங்குச் சோழனது தோளைக் கணயமும் புணையுமாக உருவகப்படுத்துமிடத்து வியப்புச்சுவை தோன்றக் கூறப்படுதலின் இஃது அற்புத வுருவகமாம். என்ற இலக்கணம் காணப்படுகின்றது.

இனி இச் செய்யுளின்கண் உள்ள கணையம் என்ற சொல்லைப்பற்றியே ஆராய்வோம்.

கணை—பாணம் கணை + அம் சாரியை பெற்று கணையம் என்று கூற இடமுண்டு என்றாலும் புறநானூறு செய்யுள் 14.

"கடுங்கண்ண கொல்களிற்றாற்
காப்புடைய எழுமுருக்கி"; என்பதாலும்

வன் கண்மையையுடைய கொலையானையாலே காவலையுடைய கணைய மரத்தை முறித்து என்ற வுரையாலும் டாக்டர் உ. வே. சாமிநாதயரவர்கள் கணயம்—கதவின் உட்புறத்தே குறுக்காகப் போடப்படும் மரம் எனக் குறிப்பதாலும், (புறம் 90) "எழு மரங்கடுக்குந் தாள் தோய் தடக்கை" எனக் கைக்கு கணைய மரத்தை உவமித்திருத்தலாலும் இளங்கோவடிகள் முதலியோர் எடுத்தாள்வதாலும் யானை உள்ளே வராமல் தடுப்பதற்கு அம்பைவிட தடுக்கும் மரமே (கணையம்) என்பதே சிறப்புடைப் பொருளாகும். என்பதனைக் கருத்திற்கொண்டு மகிழ்க.

பொருந்துமா சிந்திக்க.

முல்லை பூத்த முறுவல்.

திரு. K. சோமசுந்தரம் பிள்ளை, B. A., B. L., தஞ்சை.

I

திருவேரகத் திருப்பதிகம்.

அருட்டரும் நினதுபாத பங்கயமென்
அகத்திடை பதித்தரு நாமம்

தெருட்டருமை யிருநூற்றினைப் போற்றும்
திகழ்தரு சீலமுமேற்று

மருட்டனை யகற்றவேரகத் துறையும்
மாண்புடைக் குகனெனக் கூற

இருட்டனை நீக்கிப்பேறெனக் களித்த
ஈடிலா அருட்பெருஞ் சோதி! (க)

பேசருமமுத முண்ட வாறென்னப்
பீடுறு நலங்களைச் சுவைத்து

ஏசருநின் சீர்மனமு றப்பரவ
ஏற்றறி வினையினைக் களைந்தாய்!

வீசருமென்றன் செயலினைக் கண்டும்
விளக்கமதரு ளிய பான்மை

நேசரைக் காக்கும் நினதருட் பெருக்கோ!
நேரிலா வென்றவ மென்கோ! (உ)

சோதியே! சுடரே! மென்னகமுற்றுச்
சோர்வுறு தீவினை விளைத்து

தீதினைக் கொடுத்து நின்றிடுங் காமத்
திறத்தினைக் கெடுத்தருள் புரிந்தாய்!

வாதிடுமென் மேலார்வ மாம்பாரை
வல்வினை நிலத்தினைப் போழக்

காதிடும் பிறவிக்குழிய திற்றேன்ற
கவலுறு வினையதால் வீழ்ந்தேன். [௩]

வீழ்ந்திடு மென்மேல் ஞானமில் மண்தான்
விழமிக வாணவ மென்னும்

தாழ்ந்திடு பேரிருட் டானதில் மூழ்கித்
தகைநெறி யுறுவதற் கறியா

தாழ்ந்திடு மெற்கு வருள் செயவேண்டி
ஆசிலா வேரகத் துறைவோய்!

வாழ்ந்திட வருளும் நிற்புகழன்றி
வகைபிற கடவுளை வாழ்த்தேன். [௪]

பொய்யுடற் பேணிமெய்ந் நிலைகருதாப்
புகருற நாட்களைப் போக்கி

மொய்யுடை யாற்றல் கழிந்திடுபருவ
முதிர்ந்தி யானலமரு மிந்நாள்

மெய்யுடை நின்னை அறிவுறவென்னை
மேவுமுப் பாசமும் கழன்ற

செய்யுடைப் பிறவிக் கருங்கடல் கடக்குஞ்
சீரினை எனக்கருள் புரிவாய். [௫]

பேருறு பிறவிக் கடலினைக் கடக்கப்
பேரடிப் புணையெனக் கொண்டு

சீருறும் முத்தித் கரைதனைச் சாரும்
சீர்நெறி யான்மிகத் தெரிந்தேன்.

நேருறும் அவாவை முற்றுற வளித்து
நேரிலா வகையெனை ஆண்டு

பேருறுங் கவியால் நினதருட் பேசும்
பேற்றினை அளித்த வேலவனே ! [௬]

கவலுறப் பசு வினுற்றிடும் பாசம்
களைந்து சேவடியினிற் சேர்த்து

தவலுறு வென்றன் பழவினை நலித்துத்
தாங்கி யாண்டருள் புரிதன்மை

அவலுறு செயல்கள் புரியினும் அடியார்க்
கருளிடும் அன்புடைச் செயலிப்

பவமதி லோர்ந்தே னேரகத் துறையும்
பக்குவர்க் குதவிடுங் குரவ ! [௭]

பேரருட் சுரப்பே ! யாண்டு கொண்டருளின்
பெட்பிலாப் பவமறப் பதவி

சேரருள் கதியினின் பமா முத்தி
சேர்நிலை தவிர வோருபாயம்

பாரற வெற்குப் பரித்தருள் புரிந்தாய்
பாரிடை மதுவினிற் கொடிதாம்

நீரறுங் காம வலையினிற் சிக்கா
நேரிய நிலையினைத் தேர்ந்தேன். [௮]

முத்தனே ! முதல்வா ! நினதருட் சார்பால்
மூளுடைப் பத்தியில் மூழ்கி

உத்தம வின்பச் சுவைதனை நுகர்ந்தே
உவப்பையு மளவறப் பெற்று

சித்தம துண்டா ரார்ப்பதை மான
சிலிர்த்திடு மெய்யுட னின்று

வித்தக உரையால் போற்று நாக்குழற
விளக்கமும் பெற்றுளேன் யானே. [௯]

ஞானமே நினது திருவுருக் கண்டால்
நலிவுறு மிருளினில் நீங்கி
வானமும் போற்று முத்தியா மின்ப
வாழ்வினி லாழ்ந்திடக் கிடப்பர்
மானமா கையில் வேலினை யேந்தி
மாசறு அறிவினிற் சிந்தை
மோனமா யேற்றி நிறுத்திய பான்மை
முதல்வ! பேரறிவினின் பெருக்கோ! [ய]

கைத்தல மிடத்தை மிடக்குறங் கூன்றி
கந்தனு மெனனப் பெயர் பூண்டு
வைத்தணி மூலக் கனலென நவிலும்
வாகைசேர் குண்டலி எழுப்ப
பைத்தவா வுடனோர் விரலினைக் காட்டி
பண்புசேர் குறிப்பினைத் தந்து
நைத்தவர்க் கருளிப் பொன்னி நாடதனில்
நன்குற நின்றிடுந் தேவே! [கக]

★ யாழ் நூல். ★

பேராசிரியர் விபுலானந்த அடிகளார் பதினுன்காண்டு ஆராய்ந்து எழுதிய அரிய, சிறந்த இசை நூல்.

பொருள் பொதிந்தது தோற்றம் பொலிந்தது.
விலை மலிந்தது

மெல்லிய தாள்	தாள் உறை	15—0—0
	துணி உறை	18—0—0
தடித்த தாள்	தாள் உறை	18—0—0
	துணி உறை	20—0—0

அஞ்சல் செலவு வேறு.

—o—

துயரம்.

யாழ்ப்பாணம் இராமநாதன் சீமாட்டியார் மறைவு.

இலங்கைத் தமிழ்ப் பெருமகனாரும் சைவப் பெரியாரும் சிறந்த வழக்குரைஞரும் திடமான அரசியல் அறிஞருமாயிருந்த திரு. பொன்னம்பலம் இராமநாதன் மனைவியார் 2-உயில் உலக வாழ்வு நீத்த செய்தியறிந்து பெரிதும் வருந்துகின்றோம். திரு. அம்மையார் அவர்கள் பெருமையில் சிறந்த கணவனார்க்கு ஒத்த துணைவராயிருந்து தமிழ்ப்பணி, சைவப் பணிகளில் ஈடுபட்டு நல்வாழ்க்கை நடத்தி வந்தார்கள். அவர்களைப் பிரிந்து துயருறும் அவர்கள் திருமகளார்க்கும் மருகர் திரு. சு. நடேச பிள்ளையவர்கட்கும் சங்கத்தாரின் உளங்கனிந்த இரக்கம் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

மதிப்புரை.

தில்லைச்சிற்றம்பலப் பெருங்கோயிலின் பழமையும் திருச்சித்திரகூட அமைப்பும்.

தில்லைத் திருமுறைக்கழகத்தார் வெளியீடு.—நான்கு அணா.

இது ஒரு ஆராய்ச்சி நூல். வரலாறு, கல்வெட்டு, மேல் நாட்டார் குறிப்பு முதலான ஆதரவுகள் துணையாகத் திருச்சிற்றம்பலவர் கோயில் பழமையினையும், திருச்சித்திரகூட புதுமையினையும் நன்றாக விளக்குவது. நடுநிலைமையிலுள்ள வைணவ ஆசிரியர்கள் குறிப்புக்களாலும் இது சைவர்களுக்குரிய திருச்சிற்றம்பலவனார் கோயிலே என்பது நன்கு விளங்கும்.

இராவ்சாகிப் திருவாளர்

L. N. பரமசிவம் பிள்ளை அவர்களின் பிரிவு இரங்கற்பா.

(திரு. இராம. சிவநேசன், விசலூர், திருவிடைக்கழி.)

நேரிசை ஆசிரியப்பா.

ஞாலக் கதிர்மணி; நற்றமிழ் மாமணி;
சீலத் திருச்சியிற் செழிப்புறும் லால்குடி
கோல மாநகர்க் குன்றுளிர் குணமணி;
ஆலம்உண் டோனை அனைய அருள்மணி;
பாவலர் நாவலர் பண்புடன் போற்றுந்
தேவ தாரெனச் சிறக்கும் செம்மணி;
குடிப்பிறப் பொழுக்கங் குணஞ்சால் வாய்மை
நடுநிலை இவையணி நலந்திகழ் நன்மணி;
ஈதல் இசைபட வாழ்தல் அதுவல
தூதிய மில்லுயிர்க் கெனும்உயர் மொழியை
ஓதியும் உணராப் பேதை மாக்கட்
கேதிலான் போலெடுத் தியம்பிய தனிமணி;
ஆனசீர் பரம சிவனெனும் அளியோன்!
ஞான வித்தகன் நல்லடி எய்தும்
அந்தமில் பேற்றை அடைந்தனன் மாதோ!
நந்தன மார்கழி நாளிரு பத்தேழ்
அன்னோன் பிரிவை அறிந்த ஆமுதல்
கன்றும் புள்ளும் காவும் பூவெலாம்
என்றும் அழுதிங் கேக்குறும் என்னில்
மாந்தர் அடையும் மயக்கைஎன் னுரைப்பாம்!
புலவர்பா டும்புக ழுடையோர் விசும்பின்
வலவன் ஏவா வான வூர்தியர்
என்னுஞ் செய்வினை முடித்த வெம்மிறை
மன் புக ழுடம்பு மாட்சியின்
நின்று நிலைஇயர் உலகமோ டுடனே.

மாட்சிமிக்க திருவாளர் ஸ்ரீ பிரகாசா அவர்கள்
பொன் மொழிகள்.

சென்னை மாகில ஆட்சியாளர் திருவாளர் ஸ்ரீ பிரகாசா அவர்கள் தாம்பரம் இந்தி வித்தியாலயத்தின் நான்காவது ஆண்டு விழாவில் 27—1—53 இல் தலைமை தாங்கியபோது அவர்கள் கூறிய பொன் மொழிகள், சிறப்பாக நம் செல்வத் தமிழ் மொழி குறித்துக் கூறியவை, தமிழர்களுக்கும் தமி ழன்பர்களுக்கும் பேருவகையும் பெருமிதமும் தருவனவாகும் இந்தி மொழியை நாட்டுக் கட்டாய மொழியாக ஆக்கும் முயற்சி அவர்கட்கு முழு ஒப்பம் இல்லை என்பதைக் குறிப்பிட் டார்கள்.

அவர்கள் கூறியதாவது :—

"இந்தியை இந்திய நாட்டு மொழியாக ஆக்குவதை நான் ஆதரிக்கவில்லை. நான் தமிழ் கற்க முயன்றேன். அந்தமுயற்சி யில் சில சொற்கள் கற்ற அளவிற்கு மேல் போகமுடிய வில்லை. வடக்கே இந்தி பேசும் மக்கள் பிறிதொரு மாநில மொழியைக் கற்க வேண்டுமென வற்புறுத்த வேண்டும். ஏனைய மாநில மொழிகளுக்கு இடையூறாக இந்தி மொழி பரவ வேண்டு மென்று ஆசைப் படுபவருள் நான் ஒருவ னல்லன். உண்மையில் இந்தியை நாட்டு மொழியாக்கும் கிளர்ச்சியை நான் ஒருபோதும் என் அளவில் ஆதரித்த தில்லை. இன்றும்கூட நான் இப்படிக் கூறத் தயங்கவில்லை. இந்தியை நாட்டு மொழியாக்கும் கொள்கையை நான் ஏற்றுக் கொள்ள ஏன் தயங்கினேன் என்பதை வெளிப்படையாகச் சொல்ல விரும்புகிறேன். இந்தியை நாட்டு மொழியாக்கு வதனல் அம் மொழிக்கு இடர்ப்பாடு நேர்கிற தென்றே நான் உணர்கிறேன். இந்தி பேச ஆவலுள்ளவர்கள் இந்தி என்று பேசுவனவெல்லாம் இந்தியாகக் கருதப்பட்டு வந்தன. நான்ச மாசு பேசுவதும் இந்தி என்று சொல்லக் கேட்கிறேன். கற்றறிந்த ஆண்களும் பெண்களும் இந்தி என்று பேசும் திருத்தமான மொழியும் இந்தி என்று சொல்லக் கேட்கிறேன். நான்சமாசு பேசும் மொழிக்கும் கற்றறிந்தோர் பேசும் மொழிக்கும் யாதொரு ஒற்றுமையும் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. ஆதலால் மொழி பரவப்பரவ எல்லா மக்களும் தம் விருப்பம் போலப் பேசுவதை எல்லாம் இந்தி என்று சொல்லுகிறார்கள். மொழி தாறுமாறாகப்

பேசிக் கொலை செய்யப்படுவதை நான் காணும்பொழுது அது நாட்டு மொழியாக ஆனாலும் ஆகா விட்டாலும் அது காப்பாற்றப்படவேண்டும் என்று உணர்ந்தேன். காந்தி அவர்கள் திருத்தமான இந்தி பேசுபவர் அல்லர். காந்தியவர்கள் பேசியது பிழையற்ற இந்தியன்று. இந்தியைத் தாய் மொழியாகக் கொண்ட பலரும் காந்தி அவர்கள் பேசுவது போலப் பேச முயன்று மொழியைக் கெடுத்தது எனக்குத் தெரியும். என் அருமைத் தாய் மொழி எப்பொழுதாவது நாட்டு மொழியானால் அது கொல்லப்பட்டு அழிந்து விடும் என்று கண்டேன். இந்தியைத் தாய் மொழியாக உடையவர்கள் சோம்பேறிகளாகி விடக்கூடும். ஆதலால் வேறொரு பெருநில மொழியைக் கற்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று தெரிவித்திருக்கிறேன். இந்தி பேசும் ஒருவன் தமிழ் கற்க இடர்ப்படும் பொழுது, தமிழ் பேசும் ஒருவனும் இந்தி கற்க அப்படியே இடர்ப்படுவான் என்பதை அவன் உணரக்கூடும். இந்த முறையில் நான் திராவிடக் கழகத்தாரிடத்து இரக்கங் கொள்கிறேன். இந்தி நாட்டு மொழியாக இருக்க வேண்டுமென்கிற அரசியல் அமைப்புக் குழுவினர் தீர்ப்பை அவர்கள் மதிக்க வேண்டும். ஆனால் அவர்கள் அப்படிச் செய்யவில்லை. ஏனெனில் அம்மொழி மிக வளம் படைத்ததும் மிக வல்லமையுள்ளதும் அன்று. என் தாய் மொழியில் இந்த இரண்டு பண்புகளும் காண முடியவில்லை என்று உண்மையாக ஒப்புக்கொள்ளுகின்றேன். ஆனால் அது நாட்டில் பெரும் பகுதியினரால் பேசப்பட்ட மொழியாகும்''.

நம் மொழியின் வளப்பத்தையும் சிறப்பினையும் கண்டு வியப்பும் மதிப்பும் கொண்ட அவர்கள் பின் வருமாறு பாராட்டினார்கள்.

“தமிழ் மொழி ஆற்றலும் அழகும் இனிமையும் வாய்ந்த மொழிஎன்றும் அதன் ஒப்பற்ற பண்பு சென்ற இரண்டாயிரம் ஆண்டுகளாக ஒரே படித்தாகப் பேசப் பெற்று வருகிறது என்றும் இந்தப் பண்பு உலகத்து வேறெந்த மொழிக்கும் உண்டென்று சொல்ல முடியாதென்றும் என் இனத்தார்க்குத் தெரிவித்துள்ளேன். இத்தகைய அழகிய மொழியை வழி வழியாகப் பெற்றவர்களும் பேசுபவர்களும் இந்தி மொழியை ஏற்றுக்கொண்டது நாட்டு ஒற்றுமைக்காகவே தான். அவர்களுக்கு எவ்வகை பாராட்டும் உரியதாகும். ஆனால் நான் யாரிடத்தும் இந்தியைத் திணிக்க விரும்பவில்லை''.